# TNPSC GROUP I, II, IIA, IV - 2025

# நடப்பு நிகழ்வுகள் (MARCH- 18)

**MADURAI RK IAS ACADEMY**
NO 128, Second Floor (KFC Building), K K Nagar,
Opposite District Court, Madurai-625020.

9843838779, 9159962788

**Detailed Answer**
**& Discussion available**

1. தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் ஒரு உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை விவாதத்திற்கு எடுக்க பேரவை விதி 70(2) இப்படி எத்தனைக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும்

A) 25 B) 35 C) 40 D) 50

E) விடை தெரியவில்லை

In the Tamil Nadu Legislative Assembly, a resolution proposed by a member must have the support of not less than how many members as per Rule 70(2) of the Assembly to be taken up for discussion

A) 25 B) 35 C) 40 D) 50

E) Answer not known

2. பின்வரும் எந்த நூலை பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் மத்திய கலாச்சார அமைச்சகம் ஒரு விரிவான முயற்சியை துவங்கி உள்ளது

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை

C) கம்பராமாயணம் D) பெரிய புராணம்

E) விடை தெரியவில்லை

The Union Ministry of Culture has launched a comprehensive initiative to preserve and promote which of the following books?

A) Silappathikaram B) Manimekalai

C) Kambaramayanam D) Periya Puranam

E) Answer not known

தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான படைப்புகளில் ஒன்றான கம்ப ராமாயணத்தைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் ஒரு முயற்சியாக, கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள தென்மண்டல கலாச்சார மையம், 'கம்ப ராமாயண' பாராயணங்களின் பாரம்பரியத்தையும் அதன் பரந்த கலாச்சார தாக்கத்தையும் புதுப்பிக்கும் நோக்கில் ஒரு விரிவான முயற்சியைத் தொடங்குகிறது.

3. வரட்டாறு நீர்த்தேக்கம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது

A) தர்மபுரி B) கிருஷ்ணகிரி C) சிவகங்கை D) திருநெல்வேலி

E) விடை தெரியவில்லை

In which district is Varattar reservoir located?

A) Dharmapuri B) Krishnagiri C) Sivaganga D) Tirunelveli

E) Answer not known

4. பின்வரும் எந்தத் திட்டம் நிதி உள்ளடக்கத்திற்கான தேசிய இயக்கம் என்று அழைக்கப்படுகிறது

A) பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY)

B) பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY)

C) பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY)

D) பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY)

E) விடை தெரியவில்லை

Which Scheme is called the National Mission for Financial Inclusion

A) Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY)

B) Pradhan Mantri Suraksha Bima Yojana (PMSBY)

C) Pradhan Mantri Jeevan Jyoti Bima Yojana (PMJJBY)

D) Pradhan Mantri Mudra Yojana (PMMY)

E) Answer not known

1. நாட்டில் நிதிசார் வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு வங்கிச் சேவைகளை வழங்குவதற்காக பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குத் திட்டம் கடந்த 2014-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.
2. மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 07.03.2025 வரை மொத்தம் 55.02 கோடி ஜன்-தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன, இதில் 36.63 கோடி கணக்குகள் கிராமப்புறங்களிலும், புறநகர் பகுதிகளிலும் உள்ளன.

5. உதான் திட்டம் பின்வரும் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது

A) 2015 B) 2017 C) 2019 D) 2021

E) விடை தெரியவில்லை

In which year was the UDAN scheme launched?

A) 2015 B) 2017 C) 2019 D) 2021

E) Answer not known

1. 27 ஏப்ரல் 2017 ஆண்டு தொடங்கப்பட்டது.
2. உதான் (UDAN - Ude Desh ka Aam Naagrik / நாட்டின் பொதுக் குடிமகன் பறந்திடுக)
3. 'உதான்' திட்டத் தின்கீழ் அடுத்த 10 ஆண்டுகளில் 120 புதிய விமான நிலை யங்களை சேர்த்து, 4 கோடி மக்களுக்கு விமானப் போக்கு வரத்து இணைப்பு கிடைக்க வழிவகை செய்யப் படும் என்று மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்தார்.

6. பின்வரும் எந்த ஆண்டு ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் திட்டம் (NBS) அரசால் தொடங்கப்பட்டது

A) 2010 B) 2012 C) 2015 D) 2017

E) விடை தெரியவில்லை

In which of the following year was the Nutrition Based Subsidy Scheme (NBS) launched by the government?

A) 2010 B) 2012 C) 2015 D) 2017

E) Answer not known

1. பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் (பி&கே) உரங்களுக்கு 01.04.2010 முதல் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் (NBS) திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது.
2. NBS திட்டத்தின் கீழ், டை-அம்மோனியம் பாஸ்பேட் (DAP) உள்ளிட்ட ஊட்டச்சத்து உள்ளடக்கத்தைப் பொறுத்து, மானிய விலையில் வழங்கப்படும் P&K உரங்களுக்கு, ஆண்டு/இரு ஆண்டு அடிப்படையில் ஒரு நிலையான தொகை மானியம் வழங்கப்படுகிறது.
3. NBS திட்டத்தின் கீழ், P&K துறை கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது, உர நிறுவனங்கள் அரசாங்கத்தால் கண்காணிக்கப்படும் நியாயமான அளவில் MRPயை நிர்ணயிக்க அனுமதிக்கப்படுகின்றன.
4. உர நிறுவனங்கள் சந்தை இயக்கவியலுக்கு ஏற்ப உரங்களை உற்பத்தி செய்கின்றன/இறக்குமதி செய்கின்றன.

7. பின்வரும் கூற்றுக்களில் எது தவறு

A) சந்திராயன் I - 2008 B) சந்திராயன் II - 2019

C) சந்திராயன் III - 2023 D) சந்திராயன் IV - 2030

E) விடை தெரியவில்லை

Which of the following statements is incorrect

A) Chandrayaan I - 2008 B) Chandrayaan II - 2019

C) Chandrayaan III - 2023 D) Chandrayaan IV - 2030

E) Answer not known

1. சந்திரயான்-1 திட்டம் கடந்த 2008-ம் ஆண்டிலும், சந்திரயான்-2 திட்டம் 2019-ம் ஆண்டிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன.
2. 2023 ஆக 23-ல் சந்திரயான்-3 வெற்றிகரக நிலவின் தென் துருவத்தில் எந்தவித சேதாரமும் இன்றி சாப்ட் லேண்டிங் மூலம் விக்ரம் லேண்டரை தரையிறக்கியது. இதன் மூலம், இந்த சாதனையை படைத்த உலகின் 4வதுநாடு என்றபெருமை இந்தியாவுக்கு கிடைத்தது.
3. சந்திரயான்-4 திட்டத்தை 2027-க்குள் நிறைவேற்ற இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளை சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
4. சந்திரயான்-5 திட்டத்தில் ஜப்பானுடன் இணைந்து நாங்கள் செயல்பட உள்ளோம். சந்திரயான்-5 திட்டம் நிலவை -முழுமையாக ஆராய்ச்சி செய் யும் நோக்கம் கொண்டது.
5. சந்திரயான் -5 மற்றும்6-வது திட்டங்களை அடுத்த பத்தாண்டு களுக்குள் நிறைவேற்ற இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

8. "வருணா" கப்பல் படை கூட்டு பயிற்சியை இந்தியா எந்த நாட்டுடன் இணைந்து மேற்கொள்கிறது

A) அமெரிக்கா B) ரஷ்யா C) இங்கிலாந்து D) பிரான்ஸ்

E) விடை தெரியவில்லை

India is conducting the Varuna naval exercise with which country?

A) America B) Russia C) England D) France

E) Answer not known

1. இந்தியா - பிரான்ஸ் இடையேயான நீடித்த கடல்சார் நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் இரு நாட்டுக் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி மார்ச் 19 முதல் 22 வரை நடைபெறுகிறது.
2. இந்தக் கூட்டுப் பயிற்சி கடந்த 2001-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
3. கடற்படையின் செயல்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நடைபெறும் பயிற்சியில் கடற்பகுதிகள், வான் பகுதிகள் ஆகியவற்றில் உத்திசார் பயிற்சிகளை மேற்கொள்கிறது.
4. விமானம் தாங்கி போர்க் கப்பல்களான விக்ராந்த் மற்றும் சார்லஸ் டி கோல் ஆகிய இரு கப்பல்கள் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
5. இந்தப் பயிற்சியில் பிரான்சின் நவீன ரக ரஃபேல்-எம் போர் விமானங்களும் இந்தியாவின் மிக்-29 கே போர் விமானங்களும் இடம் பெற்றுள்ளது.

9. இளையராஜா தனது முதலாவது மேற்கத்திய செவ்வியல் சிம்போனி யான வேலியிண்ட்டை எந்த இசை குழு உடன் இணைந்து நடத்தினார்

A) ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழு

B) தேசிய சிம்பொனி இசைக்குழு

C) நியூயார்க் பில்ஹார்மோனிக்

D) லண்டன் சிம்பொனி இசைக்குழு

E) விடை தெரியவில்லை

Ilayaraja conducted his first Western classical symphony, Valentine, with which orchestra?

A) Royal Philharmonic Orchestra

B) National Symphony Orchestra

C) New York Philharmonic

D) London Symphony Orchestra

E) Answer not known

இசைஞானி இளையராஜா லண்டனில் (March 8, 2025) தனது முதல் சிம்பொனியை அரங்கேற்றம் செய்கிறார். இதற்கு வேலியன்ட் என பெயரிட்டுள்ளார்.

முதல் முறையாக, இந்தியத் திரைப்படத் துறையைச் சேர்ந்த ஒரு இசையமைப்பாளர் லண்டனில் மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனியை வழங்கியுள்ளார்

10. நாடாளுமன்ற நடவடிக்கைகளை செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மொழிபெயர்ப்பு முன்முயற்சி எது

A) சன்சத் பாஷினி

B) சன்சத் பாரத்

C) சன்சத் அபியான்

D) சன்சத் ஷ்ரம்

E) விடை தெரியவில்லை

Which is the AI-based translation initiative for parliamentary proceedings?

A) Sansad Bhashini

B) Sansad Bharat

C) Sansad Abhiyan

D) Sansad Shram

E) Answer not known

1. மக்களவை செயலகமும், மின்னணு தொழில் நுட்ப அமைச்சகமும் நாடாளுமன்ற தரவுகளின் தொகுப்பைப் பயன்படுத்தி தயாரிப்புகள் / கருவிகளை ஒருங்கிணைத்து கூட்டாக உருவாக்க ஒப்புக் கொண்டுள்ளன.
2. மொழிபெயர்ப்புத் திறன்கள் மற்றும் பிற தொழில்நுட்ப நிபுணத்துவம் பாஷினி மூலம் பெறப்படும்.
3. சன்சாத் பாஷினியின் கீழ் உள்ள முக்கிய செயற்கை நுண்ணறிவு முன்முயற்சிகள்: செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மொழிபெயர்ப்பு • பாரம்பரிய விவாத ஆவணங்கள், நிகழ்ச்சி நிரல் கோப்புகள், குழு கூட்டங்கள் மற்றும் பிற நாடாளுமன்ற உள்ளடக்கங்களை பிராந்திய மொழிகளில் தடையின்றி மொழிபெயர்ப்பது. • மொழி ரீதியான பன்முகத்தன்மை மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் அணுகலை உறுதி செய்தல்.

11. சுனிதா வில்லியம்ஸ் முதன் முதலாக எந்த ஆண்டு விண்வெளி நிலையத்திற்கு சென்றார்

A) 2006 B) 2012 C) 2019 D) 2024

E) விடை தெரியவில்லை

In which year Sunita Williams first go to the space station?

A) 2006 B) 2012 C) 2019 D) 2024

E) Answer not known

1. அமெரிக்காவின் ஓஹையோ மாகாணத்தைச் சேர்ந்த இந்தியரான தீபக் பாண்ட்யாவுக்கும் ஸ்லோவேனியாவைச் சேர்ந்த உர்சுலின் போனிக்கும் பிறந்தவர் சுனிதா வில்லியம்ஸ்.
2. பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், அமெரிக்கக் கப்பல் படையில் விமான ஓட்டியாகப் பணியாற்றினார்.
3. ஆகஸ்ட் 1998இல் நாசாவால் தெரிவு செய்யப்பட்டு விண்வெளி வீராங்கனையாகப் பயிற்சியைத் தொடங்கினார்.
4. 59 வயதான சுனிதா வில்லியம்ஸ் மூன்று முறை விண்வெளிக்குச் சென்றுள்ளார்
   a. முதலாவது - டிசம்பர் 9, 2006
   b. இரண்டாவது - ஜூலை 15, 2012
   c. மூன்றாவது - ஜூன் 2024
5. சுனிதா வில்லியம்ஸ் ஸ்பேஸ் ஷட்டில், சோயூஸ், போயிங் ஸ்டார்லைனர், ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ டிராகன் ஆகிய நான்கு வெவ்வேறு விண்கலங்களில் பயணம் செய்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்.
6. இந்தியாவைக் குறிக்கும் விதமாக சமோசாவையும் ஸ்லோவேனியாவைச் சுட்டும் வகையில் அந்த நாட்டுக் கொடியையும் விண்வெளிக்கு சுனிதா எடுத்துச் சென்றார்.

12. மிக நீண்ட நாட்கள் விண்வெளியில் வாழ்ந்த பெண்மணி என்கிற சாதனையை படைத்தவர் யார்

A) சுனிதா வில்லியம்ஸ் B) கிறிஸ்டினா கோச்

C) வலேரி பாலியா கோவ் D) ஒலெக் கொனோனென்கோ

E) விடை தெரியவில்லை

Which women holds the record for the longest time Lived in space

A) Sunita Williams B) Christina Koch

C) Valery Polyakov D) Oleg Kononenko

E) Answer not known

**நீண்ட விண்வெளி வாழ்க்கை**

1. சோவியத் மிர் விண்வெளி நிலையத்தில் 1994 முதல் 1995 வரை 437 நாள்கள் தங்கிய ரஷ்ய விண்வெளி வீரர் **வலேரி பாலியாகோவ்** தான் இதுவரை தொடர்ந்து நீண்ட நாள்கள் விண்வெளி வாழ்க்கை நடத்தி சாதனை செய்தவர்.
2. இதுவரை ஐந்து முறை விண்வெளிக்குச் சென்றுள்ள ரஷ்ய விண்வெளி வீரர் **ஒலெக் கொனோனென்கோ** ஒட்டுமொத்தமாக 1,111 நாள்கள் விண்வெளியில் வாழ்ந்து சாதனை படைத்துள்ளார்.
3. விண்வெளியில் 328 நாள்கள் வாழ்ந்த **கிறிஸ்டினா கோச்** மிக நீண்ட நாள்கள் விண்வெளியில் வாழ்ந்த பெண்மணி என்கிற சாதனை படைத்துள்ளார்

13. உலகில் முதல் விண்வெளி நிலையத்தை உருவாக்கிய நாடு எது

A) அமெரிக்கா B) ரஷ்யா C) சீனா D) இந்தியா

E) விடை தெரியவில்லை

Which country created the world's first space station?

A) America B) Russia C) China D) India

E) Answer not known

1. 1971 ஏப்ரல் 19இல் ஏவப்பட்ட சோவியத் யூனியனின் **'சல்யுட் 1'** தான் உலகின் முதல் விண்வெளி நிலையம். இதை விண்குடில் என்றும் சொல்லலாம்.
2. 1973 மே 14இல் தொடங்கப்பட்ட **'ஸ்கைலேப்'** அமெரிக்காவின் முதல் விண்குடில்.
3. 2011 செப்டம்பர் 29 அன்று ஏவப்பட்ட **தியாங்காங்** தான் சீனாவின் முதல் விண்வெளி நிலையம். 2021 ஏப்ரல் 29 முதல் சீனாவின் தியாங்காங் விண்வெளி நிலையம் இயங்கி வருகிறது.
4. நாசா, ரோஸ்கோஸ்மஸ்(ரஷ்யா), ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், கனடா விண்வெளித் துறை, ஜப்பான் விண்வெளித் துறை ஆகிய நிறுவனங்கள் இணைந்து ISS எனப்படும் சர்வதேச விண்வெளி நிலையத்தைச் செயல்படுத்துகின்றன
5. **பாரதிய அந்தரிக்ஷா ஸ்டேஷன்** எனும் ஆய்வு நிலையத்தை 2035-ஆம் ஆண்டுக்குள் விண்ணில் நிறுவ இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்துள்ளது.

## TNPSC GROUP I, II, IV – 2025

- Offline / Online புதிய வகுப்புகள், **April 02, 2025 (Wednesday)** முதல் தொடங்குகிறது.
- Online வகுப்பிற்கான Record Videos வழங்கப்படும்.
- புதிய பாடத்திட்டத்தின் படி Detailed Study Material (Tamil / English) வழங்கப்படும்.
- Weekly Two Tests with Discussion.

**MADURAI RK IAS ACADEMY**

NO 128, Second Floor (KFC Building), K K Nagar, District Court(Opposite), Madurai-625020.

**9843838779, 9159962788**